### 6. எலிகளின் பெருக்கத்தைத் தடுப்பதற்குப் பின்வரும் வழிமுறைகளைப் பின்பற்றுங்கள்

- எலிப் பாஷாணங்களைப் (நஞ்சு) பயன்படுத்தல்
- எலிப் பொறிகளைப் பயன்படுத்தல்
- எலி வளைகளை அழித்தல்.
- எலிகளை உணவாக உட்கொள்ளும் கபரகொயா, உடும்பு, பாம்புகள், ஆந்தை போன்றவற்றினை அழிப்பதனைத் தவிர்த்தல்.
- ஆந்தை போன்ற எலிகளை உணவாக உட்கொள்ளும் பறவைகள் வயல்வெளிகளினை அண்டிய பகுதிகளில் வந்து தங்குவதனை அதிகரிப்பதற்கு மரத்தடிகள், தென்னை ஓலை மட்டைகள் போன்றவற்றை நட்டு வைத்தல்
- எலிகளை அழிப்பதற்கு உங்களுக்குத் தெரிந்த பாரம்பரிய முறைகளைப் பயன்படுத்தல்







### உங்கள் பிரதேசத்தில் எலிக் காய்ச்சல் பரவியிருப்பின் என்ன செய்ய வேண்டும்?

1. மேற்கூறப்பட்ட நோய் அறிகுறிகள் ஏதாவது இருப்பின் உடனடியாக ஒரு வைத்தியரைச் சந்தியுங்கள்.

2. (i) வயல், சதுப்பு நிலங்கள், ஆறு, வாய்க்கால்கள், நீர் தேங்கிய இடங்கள் ஆகியவற்றிற்கு அருகில் எப்பொழுதும் வேலை செய்பவராயின், வேலை ஆரம்பமாவதற்கு ஒரு வாரத்திற்கு முன்பே பாதுகாப்புச் சிகிச்சை நடவடிக்கைகள் சம்பந்தமான ஆலோசனைகளைப் பெற்றுக் கொள்வதற்காக பிரதேச சுகாதார வைத்திய அதிகாரி அல்லது பொதுச் சுகாதாரப் பரிசோதகரைச் சந்தியுங்கள்.

   (ii) இந்தப் பாதுகாப்பு மருந்துகளை சுகாதார வைத்திய அதிகாரி காரியாலயங்களில் இருந்து அல்லது பொதுச் சுகாதாரப் பரிசோதகரிடமிருந்து (பி.எச்.ஐ) இலவசமாகப் பெற்றுக் கொள்ள முடியும்.

3. உங்கள் பிரதேசத்தில் இந்த நோயாளிகள் இருப்பது தெரிய வந்தால் அவசரமாக சுகாதார அதிகாரிகளுக்குத் தெரியப்படுத்துங்கள்.

4. பிரதேசத்தின் சுகாதார வைத்திய அதிகாரி அல்லது பொதுச் சுகாதாரப் பரிசோதகரைச் சந்தித்து உங்களுக்குத் தேவையான மேலதிக விபரங்களைப் பெற்றுக் கொள்ளுங்கள்.

தயாரிப்பு: சுகாதாரக் கல்விப் பணியகம்
தொற்று நோய்த் தடுப்புப் பிரிவு
© - 2008

Design by j ADS 077-3331919

# எலிக் காய்ச்சல்

## லெப்டோஸ்பைரோஸிஸ்



## எலிக் காய்ச்சல் என்றால் என்ன?

எலிக் காய்ச்சல் என்பது எலியிலிருந்தும் மற்றும் மாடு, எருமை போன்ற சில மிருகங்களிலிருந்தும் தொற்றுகின்ற ஒரு வகைக் காய்ச்சலாகும். எலிக் காய்ச்சலினைத் தொற்றச் செய்வது ஒரு வகை பக்ரீரியாவாகும்.

நோயினால் பாதிக்கப்பட்ட எலியின் சிறுநீர் மூலம் இந்த பக்ரீரியா வெளிச் சூழலுடன் சேர்கின்றது. வயலிலுள்ள நீர் தேங்கும் குழிகள் மற்றும் நீர்த் தேக்கங்களில் இந்த பக்ரீரியா தங்கியிருக்கும்.



## இந்த பக்ரீரியா எமது உடலினுள் நுழைவது எப்படி?

உடலில் வெட்டுக் காயங்கள், கீறல்கள், கண்ணுக்குத் தெரியாத சிராய்ப்புகள் போன்றவற்றுடன் வயலில் வேலை செய்கையில்,

வயலுக்கு அண்மையில் உள்ள ஓடாத நீர் தங்கியுள்ள இடங்களில் குளிக்கும் பொழுது, கண்களிலுள்ள மெல்லிய படலங்கள் ஊடாக,

எலியின் சிறுநீர் கலந்த நீரினை குடிப்பதற்கோ அல்லது வாய் கழுவுவதற்கோ பாவிக்கும்பொழுது,



கைவிடப்பட்ட வயலுக்குள் நுழையும் விவசாயியா-னால் நீங்கள் இந்த நோயினால் பாதிப்படையும் ஆபத்து மிக அதிகமானது.

## நோய் அறிகுறிகள் எவை?

- காய்ச்சல்
- தசைகளில் கடுமையான வேதனை
- கண்கள் கடுமையான சிவப்பாக மாறுதல்

மேற்சொன்ன பிரதான நோய் அறிகுறிகளுடன்

- வாந்தி
- தலையிடி
- உடல் பலவீனம்
- சிறு நீர் கடுமையான மஞ்சள் நிறமாதல்
- சிறுநீருடன் இரத்தம் வெளியேறல்
- சிறு நீரின் அளவு குறைதல்

போன்ற நோய் அறிகுறிகளும் காணப்படலாம். சில நோயாளிகள் சில வேளைகளில் எவ்வித நோய் அறிகுறிகளையும் வெளிக் காட்டாமலும் இருக்க முடியும்.

## உரிய வேளையில் முறையான சிகிச்சை பெறவில்லையானால்,

- சிறு நீரகம், இதயம், மூளை போன்ற உறுப்புக்களுக்கு பலவித பிரச்சினைகளை ஏற் படுத்தி இந்த நோய் உயிர்க் கொல்லியா கலாம்.

**ஒரு நோயாளியிடமிருந்து இன்னுமொருவருக்கு இந்த நோய் பரவுவதில்லை**

## எலிக் காய்ச்சல் நோயிலுருந்து தவிர்ந்து கொள்வதற்கு என்ன செய்ய வேண்டும்?

1. உங்களது பயிர்நிலம், வயல் மற்றும் அதனைச் சூழவுள்ள பிரதேசங்களைச் சுத்தமாக வைத்திருங்கள்.
2. பயிர் நிலங்களைத் தயார் செய்கையில் கை, கால்களுக்கு பாதுகாப்பு உறைகளை (சப்பாத்து, கையுறை) அணிந்து கொள்ளுங்கள்.
3. நீர் தேங்கியுள்ள இடங்களிலிருந்து நீர் வடிந்து செல்ல இடமளியுங்கள்.



4. வயல் மற்றும் நீர் தேங்கியுள்ள இடங்களில் அனாவசியமாக இறங்குதல்; குளித்தல்; கை, கால், முகம், வாய் கழுவுதல் ஆகியவற்றிலிருந்து தவிர்ந்து கொள்ளுங்கள்.
5. குளித்தல், மற்றும் குடிப்பதற்கு நீர் பெறும் பாதுகாப்பற்ற கிணறுகள் மிருகங் களின் மலம், சிறுநீர் ஆகியவற்றினால் மாசுபட்டு அசுத்தமாவதைத் தவிர்ப்பதற்கு கிணற்றினைச் சுவரினால் பாதுகாத்துக் கொள்ளுங்கள்.